# அடக்கம் சம்பந்தமான சட்டங்கள்



## உங்களுக்கு அடக்கம் செய்வதற்கான உரிமைகள் உள்ளனவா?

**1**




இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 10 ஆனது ஒவ்வொரு நபருக்கும் சிந்தனை செய்வதற்கான சுதந்திரம், மனசாட்சி மற்றும் மதத்தை பின்பற்றுவதற்கான சுதந்திரம் என்பனவற்றை வழங்குகின்றது. இது உங்களுடைய தெரிவிற்கிணங்க ஒரு மதத்தை அல்லது நம்பிக்கையினைக் கொண்டிருப்பதற்கான மற்றும் ஏற்றுக்கொள்வதற்கான சுதந்திரத்தையும் உள்ளடக்குகின்றது. அரசியலமைப்பின் உறுப்புரை 12(2) ஆனது அனைத்து நபர்களும் சமமாக நடத்தப்பட வேண்டும் என கூறுகின்றது. ஆகவே மதம், மொழி, இனம், பால் போன்ற எவ்வித வேறுபாடுகளுமின்றி அடக்கம் செய்வதற்கான உரிமை அனைத்து நபர்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும். அடக்கம் செய்வதற்கான உங்களுடைய உரிமைகளை உங்களுடைய மதத்தின் அடிப்படையில் மறுக்க இயலாது.

மேற்குறிப்பிடப்பட்ட அரசியலமைப்பு உறுப்புரைகளுக்கு மேலதிகமாக, 1899 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க இடுகாடுகள் மற்றும் புதை நிலங்கள் கட்டளைச் சட்டமானது இடுகாடுகள் தொடர்பிலான விடயங்களைக் கையாளுகின்றச் சட்டமாக அமைகின்றது. அக் கட்டளைச் சட்டத்தில் காணப்படுகின்ற சில முக்கியமான விடயங்கள் கீழேத் தரப்பட்டுள்ளன.

## யார் பொறுப்புடையவர்கள்?

## 2



பிரதேச சபை, பிரதேச செயலகம், மாநகர சபை அல்லது நகர சபை அப்பிரதேசத்தில் எழுகின்ற இடுகாடுகள் தொடர்பிலான விடயங்களுக்குப் பொறுப்பான அதிகார சபைகளாகக் காணப்படும். (பிரிவு 6)

உள்ளூர் அதிகார சபையினால் நியமிக்கப்படுகின்ற பேணுனர் முழு இடுகாட்டினதும் பராமரிப்பிற்கு பொறுப்பானவராகக் காணப்படுவார். மேலும், இடுகாடு மற்றும் பிரத்தியேக பயன்பாடுகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடுகாட்டின் பகுதிகள் பற்றிய ஒரு திட்டப்படத்தினைக் கொண்டிருப்பதும் இவருடைய பொறுப்பாகும். (பிரிவு 16 மற்றும் 23)

| | |
|---|---|
| இடுகாட்டிற்குள் மதச் சடங்குகளைப் பின்பற்றுதல் அனுமதிக்கப்பட்டுள்ளதா? | **3** |



அடக்கம் செய்வதற்கான அல்லது தகனம் செய்வதற்கான சிறு தேவாலயமொன்றை அல்லது வேறு ஏதேனுமொரு கட்டிடமொன்றை இடுகாட்டிற்குள் கட்டுவதற்கு உள்ளூர் அதிகார சபை அனுமதி வழங்க இயலும். (பிரிவு 9)

கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டிருக்குமாயின், குறிப்பிட்ட நபருடைய மதச் சடங்குகளை அல்லது வழிபாடுகளை மதகுரு ஒருவர் அல்லது வேறு எவரேனும் ஒரு நபர் மேற்கொள்வதற்கு இயலும். (பிரிவு 13)

## இடுகாட்டின் ஒரு பகுதியைப் பிரத்தியேகமான பாவனைக்கென நீங்கள் பெற்றுக்கொள்ள இயலுமா?

**4**





ஒரு மதப் பிரிவொன்று இடுகாட்டின் ஒரு பகுதியினைத் தமக்குத் தருமாறு கோரிக்கை விடுக்குமிடத்து குறிப்பிட்ட உள்ளூர அதிகார சபையானது இடுகாட்டின் ஒரு பகுதியினை விற்பதற்கு இயலும். அத்தகைய விற்பனையானது நம்பிக்கை உறுதியொன்றின் மூலமாக இடம்பெறவேண்டும் என்பதுடன் அம் மதப்பிரிவானது அவ் இடுகாட்டினை நம்பிக்கையின் அடிப்படையில் நடத்த வேண்டும். (பிரிவு 11(1))

பிரிவு 11 இல் கூறப்பட்டுள்ள இடுகாட்டுப் பகுதியொன்றின் விற்பனைக்கு அப்பால், குறிப்பிட்ட உள்ளூர் அதிகார சபையானது ஒழுங்குவிதிகளின் ஊடாக இடுகாட்டின் வேறு ஒரு பகுதியொன்றை தகன நோக்கங்களுக்காக ஒதுக்க இயலும். (பிரிவு 17)

மேலும், பிரிவு 11 இல் கூறப்பட்டுள்ள இடுகாட்டுப் பகுதியொன்றின் விற்பனைக்கு அப்பால், குறிப்பிட்ட உள்ளூர் அதிகார சபையானது, இடுகாட்டின் பகுதியொன்றை ஏதேனும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, கால மட்டுப்பாடுடனோ அல்லது கால மட்டுப்பாடின்றியோ விற்பதற்கு அல்லது இலவச கொடையாக வழங்குவதற்கு இயலும். குறிப்பிட்ட உள்ளூர் அதிகார சபையானது, நினைவுச் சின்னமொன்றை ஸ்தாபிப்பதற்கான, கல்லறையொன்றைக் கட்டுவதற்கான அல்லது இடுகாட்டுப் பகுதிக்குள் அமைந்துள்ள தேவாலயத்தின் சுவர்களில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட வரைப்பட்டிகையொன்றினை அமைப்பதற்கான உரிமையினை விற்பதற்கு அல்லது வழங்குவதற்கு இயலும். (பிரிவு 19)

## இடுகாட்டின் ஒரு பகுதிக்கான கோரிக்கை-யினை நீங்கள் எவ்வாறு முன்வைப்பீர்கள்?

**5**



புதை நிலத்திற்காக விண்ணப்பிக்கின்றபோது, புதை நிலத்தின் அமைப்பினைத் தெளிவாகக் காட்டுகின்றதான வரைவுத்திட்டமொ-ன்றினையும் வழங்குதல் வேண்டும். (பிரிவு 33)

## புதை நிலமொன்றைப் பெற்றுக்கொள்வ-தற்கானப் படிமுறைகள் யாவை?

# 6



1. பிரதேச செயலகத்திற்கு விண்ணப்பமொன்றை முன்வைத்தல்
2. பிரதேச செயலகமானது, பிரதேச மற்றும் மாவட்ட செயல-கங்களிலுள்ள குழுக்களுடன் கலந்துரையாடும்
3. பிரதேச செயலகமானது, சுற்றாடல் அதிகார சபை போன்ற வேறு பல அதிகார சபைகளின் ஆலோசனையினையும் நாடும்
4. மாகாண காணி ஆணையாளரின் அனுமதியும் பெற்றுக்கொள்-ளப்படும்
5. கொழும்பிலுள்ள காணி ஆணையாளர் நாயகத்தின் அனுமதி-யும் பெற்றுக்கொள்ளப்படும்
6. குறிப்பிட்ட காணி உள்ளூராட்சி சபைக்கு வழங்கப்படும்.
7. உள்ளூராட்சி சபை இதனை வர்த்தமானி மூலமாக அறிவி-க்கும்

## பிரிவு 11 இன் கீழ் நீங்கள் இடுகாட்டின் ஒரு பகுதியினை வாங்குவீர்களாயின், உங்களுடைய கடமைகள் யாவை?

# 7



குறிப்பிட்ட மதப்பிரிவானது பொறுப்பாளிகளை நியமிக்க இயலும். பொறுப்பாளிகள் கீழ்வரும் அதிகாரங்களைக் கொண்டிருப்பார்கள்: (பிரிவு 11(2))

1. குறிப்பிட்ட அவ் இடுகாட்டுப் பகுதியினைப் பராமரிப்பதற்கானக் காவற் பொறுப்பாளர், புதைகுழி தோண்டுபவர் அல்லது வேறு எவரேனும் ஒருவரை நியமிப்பதற்கு இயலும்
2. குறிப்பிட்ட அவ் இடுகாட்டுப் பகுதிக்குள் புதைப்பதற்கானப் பிரத்தியேக உரிமையினை வழங்குவதற்கு இயலும்
3. நினைவுச் சின்னமொன்றை ஸ்தாபிப்பதற்கு, கல்லறையொன்றைக் கட்டுவதற்கு அல்லது இடுகாட்டுப் பகுதிக்குள் அமைந்துள்ள தேவாலயத்தின் சுவர்களில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட வரைப்பட்டிகையொன்றினை அமைப்பதற்கு இயலும்
4. குறிப்பிட்ட அவ் இடுகாட்டுப் பகுதிக்குள் தகனம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு இயலும்

குறிப்பிட்ட மதப்பிரிவினால் நியமிக்கப்படுகின்ற இடுகாட்டின் பேணுனர் அல்லது காவற்பொறுப்பாளர், மேற்கொள்ளப்படுகின்ற அடக்கங்கள் மற்றும் தகனங்கள் தொடர்பில் ஒரு பதிவேட்டினை வைத்திருக்க வேண்டும். (பிரிவு 15)

## எப்போது அமைச்சருக்கு விண்ணப்பி-க்க இயலும்?

# 8



கீழ்வரும் சந்தர்ப்பங்களில் அமைச்சருக்கு விண்ணப்பம் தொடர்-பில் மேன்முறையீடு செய்ய இயலும்.

1. அடக்கம் செய்வதற்கான அல்லது தகனம் செய்வதற்கான சிறு தேவாலயமொன்றை அல்லது வேறு ஏதேனுமொரு கட்டிடமொன்றை இடுகாட்டிற்குள் கட்டுவதற்கு உள்ளூர் அதி-கார சபை அனுமதி வழங்க மறுக்கின்றபோது
2. ஒரு மதப் பிரிவொன்று இடுகாட்டின் ஒரு பகுதியினைத் தமக்குத் தருமாறு கோரிக்கை விடுக்குமிடத்து குறிப்பிட்ட உள்ளூர் அதிகார சபையானது இடுகாட்டின் ஒரு பகுதியினை விற்பதற்கு மறுக்குமிடத்து
3. உள்ளூர் அதிகார சபையானது இடுகாட்டின் ஒரு பகுதியினை விற்பதற்கு நியாயமற்ற ரீதியில் ஒரு உயர் விலையினைக் கோருகின்றபோது

## நீங்கள் எங்கே புதைக்க முடியாது?

# 9



குறிப்பிட்ட வதிவிடத்தின் / வீட்டின் உரிமையாளர் அல்லது அங்கு வசிப்பவர் சம்மதமளிக்காத வரையில், அவ்விடத்திற்கு 50 அடி தொலைவிற்குள் இடுகாடொன்றைக் கட்ட இயலாது. (பிரிவு 8)

இடுகாட்டிற்குள் அமைந்துள்ள தேவாலயத்தின் அல்லது வேறு கட்டிடத்தின் கூரையின் கீழ் அல்லது அத்தகைய தேவாலயத்தின் அல்லது வேறு கட்டிடத்தின் வெளிப்புறச் சுவரிலிருந்து 5 அடி தொலைவிற்குள் புதைக்க இயலாது. (பிரிவு 18)

புதைக்கப்பட்டச் சடலமொன்றைத் தோண்டி எடுக்க முடியுமா?

**10**



குற்றவியல் விசாரணைகளுக்காகத் தவிர்ந்து வேறு எந்தக் காரணத்திற்காகவும், மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் அனுமதியின்றி புதைக்கப்பட்ட சடலமொன்றை புதைக்கப்பட்ட இடத்திலிருந்து அகற்றக்கூடாது. (பிரிவு 14 மற்றும் 37)

## எவை குற்றங்களாகக் கருதப்படும்?

## 11




இடுகாட்டின் ஏதேனுமொரு பகுதியை வேண்டுமென்றே அழித்தல் அல்லது சிதைத்தல், சுவர்களில் ஏதேனும் அறிவித்தலை ஒட்டு-தல், ஏதேனுமொரு கல்லறையை, நினைவுச்சின்னத்தை அல்லது அது போன்ற ஏதேனுமொன்றை அழித்தல், அல்லது இடுகாட்டின் ஏதேனுமொரு பகுதிக்கு சேதம் விளைவித்தல் குற்றமாகும். (பிரிவு 28)

இடுகாட்டிற்குள் விளையாடுதல், துப்பாக்கிப் பிரயோகம் மேற்-கொள்ளுதல் (இராணுவ ஈமச்சடங்காக இல்லாதவிடத்து), அடக்கத்திற்காக அல்லது தகனத்திற்காக இடுகாட்டில் கூடியுள்ள நபர்களுக்கு இடையூறு செய்தல் அல்லது இடுகாட்டிற்-குள் தொல்லை விளைவிக்கும் செயல்களைப் புரிதல் என்பன குற்றங்களாகும். (பிரிவு 29)

## பொருத்தமான நீதிமன்றம் எது?

## 12



இக்கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்களுக்குரிய நியாயாதிக்கத்தினை நீதவான் நீதிமன்றம் கொண்டுள்ளது. (பிரிவு 42)

இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றமொன்றுப் புரியப்படுமாயின், குற்றம் இடம்பெற்று மூன்று மாதங்களுக்குள் குறிப்பிட்ட குற்றத்தை புரிந்த நபருக்கெதிராக வழக்குத் தொடுக்கப்பட வேண்டும். (பிரிவு 43)

## உங்களுக்குத் தெரியுமா?



இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 292 இற்கு அமைய, எவரேனும் ஒரு நபருடைய உணர்வுகளைக் காயப்படுத்த வேண்டும் அல்லது மதத்தை இழிவுப்படுத்த வேண்டும் என்ற அறிவுடன் அல்லது எண்ணத்துடன் செயற்படுதல் அல்லது அடக்கம் / தகனம் செய்யப்படுகின்ற இடத்திற்குள் அல்லது ஈமச்சடங்குகள் செய்யப்படுகின்ற இடத்திற்குள் அத்துமீறி நுழைதல், சடலத்தை அவமரியாதைச் செய்தல் அல்லது ஈமச்சடங்குகளுக்காகக் கூடியுள்ளவர்களைத் தொந்தரவு செய்தல் என்பன குற்றச் செயல்களாகும்.

தண்டனையானது கீழ்வருவனவற்றை உள்ளடக்கலாம்:

1. தண்டப்பணம்
2. ஒரு வருடம் வரையிலான சிறைத்தண்டனை
3. தண்டப்பணம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டும்

உங்களுடைய அன்புக்குரிய ஒருவரை பொது இடுகாடொன்றில் புதைப்பதற்கு நீங்கள் மறுக்கப்பட்டால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

13




1. பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தல்
2. எவ்வித இடையூறுகளுமின்றி அடக்கம் செய்வதற்கான ஒரு ஆணையினை நீதவான் நீதிமன்றத்திடம் இருந்துப் பெற்றுத் தருமாறு பொலிஸாரிடம் கோருதல்
3. உங்களுடைய பிரதேசத்திலுள்ள குறிப்பிட்ட உள்ளூர் அதிகார சபையுடன் பேசி கீழ்வருவனவற்றுள் ஏதேனுமொன்றி-னைச் செய்யுமாறு கோரலாம்
   - உங்களுடைய அன்புக்குரியவரை பொது இடுகாடொன்றில் புதைப்பதற்கான அனுமதியினை உங்களுக்கு அளிப்ப-தற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அல்லது
   - பொது இடுகாட்டின் ஒரு பகுதியினை உங்களுடைய தேவாலயத்திற்கு / மதத்திற்கு விற்கும்படி (கட்டளைச் சட்டத்தின் 11(1) இன் கீழ்) அல்லது
   - உங்களுடைய மதத்தினர் மாத்திரம் பாவிப்பதற்கென இடுகாட்டின் ஒரு பகுதியை அல்லது காணியை ஒதுக்கும்படி

உங்களுடைய அன்புக்குரியவர்களை அடக்கம் செய்கின்றபோது உங்களுக்கெதி-ராக வன்முறையொன்று இடம்பெறுமாயின் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய படிமு-றைகள் யாவை?


**14**



1. பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தல்.
2. பொலிஸார் வன்முறையினைப் புரிந்தவரகளுக்கெதிராக இக்கட்டளைச் சட்டத்தின் பரிவு 29 இன் கீழ் அல்லது / மற்றும் தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 292 இன் கீழ் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்ய இயலும்.

பொலிஸ் அல்லது / மற்றும் குறிப்பிட்ட உள்ளூர் அதிகார சபை நடவடிக்கை எடுக்காதவிடத்து நீங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

# 15



1. முடிந்தளவு விரைவாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைப் பதிவுச் செய்தல். மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸாரை அல்லது குறிப்பிட்ட உள்ளூர் அதிகார சபையினை விசாரணைக்காக அழைக்கும்.
2. கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் (எழுத்தாணை) தாக்கல் செய்தல் - இவ்வழக்கைத் தாக்கல் செய்வதனூடாக தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி பொலிஸாருக்கு அல்லது குறிப்பிட்ட அதிகார சபைக்கு ஆணையிட்டு உங்களுக்குத் தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரலாம்.

The National Christian Evangelical Alliance of Sri Lanka (NCEASL)
Address: P.O. Box 113, Dehiwala, Sri Lanka
Tel: 011-5511358
Email: legal@nceasl.org
Web: www.nceasl.org

© The Religious Liberty Commission of the NCEASL. All rights reserved.